வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2535 / ஆ4 / 2020 நாள் 02–11–2020

பொருள் பள்ளிக் கல்வி – 2019–2020ம் கல்வியாண்டில் திருப்பத்தூர் கல்வி மாவட்டம் மற்றும் வாணியம்பாடி கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழக 5 சதவிகித தொகை விவரம் மற்றும் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 2 சதவிகித தொகை விவரங்களை 05–11–2020 அன்று ஒப்படைத்தல் சார்பு.

•••••

2019–2020 ம் கல்வியாண்டில் திருப்பத்தூர் கல்வி மாவட்டம் மற்றும் வாணியம்பாடி கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட பெற்றோர் ஆசிரியர் கழக 5 சதவிகித தொகை விவரம் மற்றும் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட 2 சதவிகித தொகை விவரங்களை 05–11–2020 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்டக் கல்வி அலுவலத்தில் பணிபுரியும் சார்ந்த பிரிவு கண்காணிப்பாளர் மற்றும் சார்ந்த பிரிவு எழுத்தர் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முன்னிலைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பள்ளிகளின் எண்ணிக்கை விவரம்
2. பள்ளிவாரியாக பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை
3. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் பெறப்பட்ட 5 சதவிகித தொகை விவரம்
4. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட 2 சதவிகித தொகை
5. இதுநாள் வரை பெற்றோர் ஆசிரியர் கழக 2 சதவிகித தொகை ஒப்படைக்கப்படாமலிருப்பின் அதற்கான காரணம்
6. பள்ளிகளிலிருந்து இதுநாள் வரை தொகை பெறப்படவில்லை என்றால் இப்பொருள் சார்பான மாவட்டக் கல்வி அலுவலகர்கள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம்

மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தவாறமல் சார்ந்த கண்காணிப்பாளர் மற்றும் சார்ந்த பிரிவு எழுத்தர் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி

நகல்
1. செயலாளர், மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
2. திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.